இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விமாணி பட்டப்படிப்பு(இயற்கை விஞ்ஞானம்)

மட்டம் 05 - இறுதிப்பரீட்சை 2008

**ESU 3211** – கல்வி உளவியல்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி. 25.08.2008 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து யாதாயினும் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. மாணவரிடத்தில் உள்ளார்ந்த கற்றலை மேம்படுத்துவதற்கு ஓர் ஆசிரியர் பின்பற்றக்கூடிய மூன்று செயலொழுங்குகளை பிரேரிக்குக.

2. பரிசோதனை முறைகளின் கீழ் கருதப்படமுடியாத பிள்ளை ஆய்வுகள் மூன்றினைப் பெயரிட்டு அவற்றிலொன்றை சுருக்கமாக விபரிக்குக

3. "ஒருவரின் வாழ்வில் பிள்ளைப்பருவம் முக்கியமானதொரு கட்டமாகும்" இக் கூற்றினை ஆதரித்து இரண்டு காரணங்களைத் தருக.

4. மாணவர்களின் சுய ஊக்கத்தினை மேம்படுத்துவதற்கு ஆசிரியர் ஒருவர் பயன்படுத்தக்கூடிய 3 செயலொழுங்குகளைச் சுருக்கமாக விபரிக்குக.

5. உங்களது மாணவர்களுக்கு முதனிலை அனுபவங்களை வழங்குவதற்கு நீங்கள் கொண்டிருக்க வேண்டிய 3 செயலொழுங்குகளைக் கூறுக.

6. எண்ணக்கரு உருவாக்கச் செயன்முறையில் உள்ள பிரதான இரு படிகளைச் சுருக்கமாக விளக்குக.

7. பிள்ளையொன்றின் "வளர்ச்சி","விருத்தி" ஆகிய பதங்களை உதாரணங்கள் தந்து ஒப்பிடுக.

8. "ஒருவரின் கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாக தயார்நிலை காணப்படுகின்றது" இக்கருத்தினை வலியுறுத்தி இரண்டு உதாரணங்களைத் தருக.

## பகுதி II

9. பின்வரும் தலைப்புகளின் கீழ் ஓர் ஆசிரியர் கல்வி உளவியலை கற்பதன் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுக.

   (i) மாணவர் நடத்தையினைப் புரிந்து கொள்ளல்.
   (ii) கற்றல் - கற்பித்தல் செயன்முறையினை ஒழுங்குபடுத்தல்.
   (iii) மாணவர் செயலாற்றுகையினை மதிப்பிடலும் பின்னூட்டலை வழங்குதலும்.

LIBRARY

10. (i) ஓர் ஆசிரியருக்கு கற்றல் கோட்பாடுகளை கற்பதன் மூன்று பயன்களை விளக்குக.

(ii) இரண்டு வித்தியாசமான குழுக்களுக்குரிய யாதாயினும் இரு கற்றல் கோட்பாடுகளைத் தெரிவுசெய்து பின்வரும் தலைப்புகளில் அவற்றின் வேறுபாடுகளை விளக்குக.

(அ) கற்றல் எவ்வாறு நடைபெறுகின்றது.
(ஆ) கற்றல் எவ்வாறு ஊக்கப்படுத்தப்படலாம்.
(இ) மாணவர் மற்றும் ஆசிரியரின் வகிபங்குகள்.

11. (i) மாணவர் நடத்தையினைக் கற்பதற்குப் பயன்படுத்தக்கூடிய பரிசோதனை முறைகள் மற்றும் பரிசோதனையற்ற முறைமைகள் ஆகியவற்றைச் சுருக்கமாக விளக்குக.

(ii) உமது வகுப்பறையிலுள்ள பிள்ளைகளை ஆராய்வதற்கு பரிசோதனை முறைமைகளை நீங்கள் எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

12. (i) உமது மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கு மாஸ்லோவின் ஊக்கக்கோட்பாட்டின் பொருத்தப்பாட்டினை விளக்குக.

(ii) உயர்வரிசை தேவைகளை நிறைவேற்றுவதற்கு மாணவர்களுக்கு உதவுவதில் ஆசிரியரின் வகிபங்கினை ஆராய்க.

(iii) தேவைகளை சுயமாகப் பூர்த்தி செய்வதற்கு ஊக்கப்படுத்தப்பட்ட ஒரு நபரின் ஐந்து பண்புகளைப் பட்டியற்படுத்துக.

13. பின்வரும் யாதாயினும் ஒன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) பிள்ளையின் விருத்திக்குப் பங்களிக்கக்கூடிய பிரதான காரணிகள்
(ii) சமநிலை ஆளுமையொன்றின் பண்புகள்
(iii) முதிர்ச்சி மற்றும் கற்றலுக்கு இடையிலான இடைத்தொடர்பு
(iv) எரிக்எரிக்சன் இனது உளசமூகக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆளுமை விருத்தி.

14. (i) வயது வளர்ச்சிக் கட்டமைப்புடன் பியாஜேயினால் விளங்கப்படுத்தப்பட்ட விருத்திக்கட்டங்களை பட்டியலிடுக.

(ii) பியாஜேயினால் விளங்கப்படுத்தப்பட்ட ஒவ்வொரு கட்டங்களினதும் 3 பண்புகளை பொருத்தமான உதாரணங்களுடன் சுருக்கமாக விபரிக்குக.

(iii) மாணவர் கற்றல் மேம்பாட்டிற்காக மேற்கண்ட கோட்பாட்டின் முக்கியத்துவத்தை ஆராய்க.

(பதிப்புரிமையுடையது)